FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education Northern Province**
**Term Examination March - 2020.**

| தரம் - 13 (2020) | 24 T- I | **அரசியல் விஞ்ஞானம் I** | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|---|

**அறிவித்தல்**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண் எழுதுக
- ❖ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தகளைக் கவனமாக வாசித்துப்பின்பற்றுக.
- ❖ 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் (X) இடுவதன் மூலம் காட்டுக.
- ❖ ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள்.

## பகுதி I

❖ **தொடக்கம் (10) வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் மாத்திரமே சரியானவையாகும். சரியான கூற்றுகளின் தொகுதி தெரிவுசெய்க.**

(01) அரசியல்

A- மனித வாழ்க்கையில் மதத்தின் வகிபங்குடன் தொடர்புடையது
B- பொதுக் கொள்கை செய்முறையுடன் தொடர்புடையது
C- பொது விவகாரங்களுடன் தொடர்புடையது.
D- முரண்பாடுகளை சமாதானமாக தீர்த்தலுடன் தொடர்புடையது
E- அரசு மற்றும் அதன் நிறுவனங்களுடன் தொடர்புடையது

1. ABCD 2. ABCE 3. ABDE 4. ACDE 5. BCDE

(02) அரசியல் கற்கை மாணவர்களை

A – பொறுப்புள்ள பிரஜைகளாக்குவதற்கு உதவுகின்றது.
B – சமூகத்தின் அதிகாரம் மற்றும் அதிகாரத்துவத்தை விளங்கிக்கொள்வதற்கு உதவுகின்றது.
C – அதிகாரப் போராட்டத்தின் உள்ளடக்கத்தினை பகுப்பாய்வு செய்ய உதவுகின்றது.
D – நல்ல மற்றும் தீய ஆட்சியை வேறுபடுத்தி இனங்காண உதவுகின்றது.
E – அவர்கள் மத்தியில் ஆன்மீகத்தை வளர்பதற்கு உதவுகின்றது.

1. ABCD 2. ABCE 3. ABDE 4. ACDE 5. BCDE

(03) அரசியல் விஞ்ஞானக் கற்கை பயன்படுவது

A- பிரசைகளின் கடமைகளையும் பொறுப்புகளையும் உயர் உணர்வுடன் நிறைவேற்றுவதற்காகும்.
B- அரசியல் விடயங்களைப் பற்றி பகுத்தறிவுசார் பெறுமானத் தீர்ப்புகளை மேற்கொள்வதற்காகும்.
C- அரசியல், நிருவாக மற்றும் இராஜதந்திரப் பரப்புகளில் மேன்மை நிலையை அடைவதற்காகும்
D- அரசியல் வகிபங்குகளைத் தர்க்கரமாகவும் செயற்றிறனுடனும் புரிவதற்காகும்.
E- தான் விரும்பாத ஒருவர் மீது சேறு பூசுவதற்கும் அவரது நடத்தையைக் கொலை செய்வதற்குமாகும்.

1. ABCD 2. ABCE 3. ABDE 4. ACDE 5. BCDE

(04) தற்கால அரசொன்றின் பணிகள்

A- சட்டத்தின் சமூகத்தின் வலையமைப்பினதும் சொத்துகளின் பாதுகாவலனாகவும் செயற்படுத்தல்

B- யுத்தபிரகடனம் மற்றும் யுத்தம் செய்தல்

C- அரசியல் கருத்தியல்களின் படி அரசின் பணிகள் மாற்றம் அடையாது

D- சமூகநிர்வாகம் வழி நடத்தல் மற்றும் கண்காணிப்பு

E- பொருளாதார நிர்வாக மற்றும் வழிநடத்தல்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

(05) தாராள (லிபரல்) ஜனநாயக அரசுமுறை

A- வரையறைக்கப்பட்ட அரசு என்ற அடிப்படை எண்ணக்கருவின் அடிப்படையில் தோற்றம் பெற்றதாகும்.

B- முதலாலித்துவ பொருளாதார அரசியல் முறையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

C- பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய அரசுகளில் மட்டும் காணப்படுகின்றது.

D- பிரதிநிதித்துவ ஜனநாயக அரசாங்க முறையில் இவ் அரசு அமைந்துள்ளது.

E- மறுமலர்ச்சி மற்றும் கைத்தொழில்புரட்சியுடன் இவ் அரசுமுறை தோற்றம் பெற்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

(06) சமவுடமைவாத அரசுமுறை

A- மாக்சிசவாதகருத்தியலின் அடிப்படையில் தோற்றம் பெற்றதாகும்.

B- சமூகத்தில் சமத்துவம் நிலைபெற்றபின்பும் அரசுநிலைத்திருக்கும்.

C- 20ம் நூற்றாண்டில் அபிவிருத்தி அடைந்த அரசு முறையாகும்.

D- பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை அபிவிருத்தி செய்வதில் கரிசனை கொள்கிறது.

E- தனியாள் முயற்சிக்குபதில் அரசாதிபத்தியம் நிலைநிறுத்தப்படும் முறைமையாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

(07) ஒற்றையாட்சி அரசாங்கம் என்பது

A- ஆள்புலரீதியாக ஒன்றுகுவித்துள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குள்ள ஒரு சிறந்த அரசாங்க முறையாகக் கருதப்படுகிறது.

B- ஒரு தனி அதிகார மையத்தை மட்டும் கொண்ட அரசாங்க முறையாகும்.

C- சிறிய நிலப்பரப்பைக் கொண்ட அல்லது ஒருமைத் தன்மையான அரசுகளுக்குச் சிறப்பாகப் பொருந்துகிறது. எனக் கருதப்படுகின்றது.

D- தனி நிர்வாக மற்றும் தனி நீதி முறைகள், ஒற்றைக் குடியுரிமை ஆகிய பண்புகளைக் கொண்டதாகும்.

E- அதிகம் செயற்றிறன் மிக்கதும் ஜனநாயகத் தன்மை குறைந்ததுமாகும் எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

(08) அரைகுறை ஜனாதிபதி அரசாங்க முறை என்பது

A- 1958ல் பிரான்சில் தளபதி டீ கோலினால் அறிமுகம் செய்யப்பட்ட ஓர் அரசாங்க மாதிரியாகும்.

B- மந்திரிசபை மற்றும் ஜனாதிபதி அரசாங்க முறைமைகளின் அடிப்படை மூலக்கொள்கைகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டதாகும்.

C- ஜனாதிபதியையும் மந்திரி சபையையும் கொண்ட இரட்டை நிறைவேற்று முறைமையைக் கொண்டதாகும்.

D- ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுகிறது.

E- ஒரு கட்சி ஆதிக்கத்தைக் கொண்ட அரசியல் முறைமைகளுக்கு அதிகம் பொருந்தும் ஓர் அரசாங்க முறைமையாகும் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

*(09)* அனைத்தாண்மை அரசாங்க முறை என்பது

A- தம்மைத் தாமே நியமித்துக் கொண்ட ஆட்சியாளரால் அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஓர் அரசாங்க முறைமையாகும்.

B- சகல அரச அதிகாரிகளும் ஆதரவு நல்கும் முறையின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஓர் அரசாங்க முறைமையாகும்.

C- அரச அதிகாரம் சில்லோராட்சி உயர் குழாமினரால் பிரயோகிக்கப்படும் ஓர் அரசாங்க முறைமையாகும்.

D- நிச்சயமான அரசியல், பொருளாதாரத் தொலைநோக்கின்றி நாட்டையாளும் ஓர் அரசாங்க முறைமையாகும்.

E- ஆட்சி பற்றிய எவ்விடயத்திலும் மக்களின் குரலில்லாத ஓர் அரசாங்க முறையாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

*(10)* பிரதிநிதித்துவம் என்பது

A- ஜனநாயக அரச முறைமையொன்றில் அரசாங்கத்தையும் ஆளப்படுவோரையும் தொடர்புபடுத்தும் பிரதான வழிமுறையாகும்.

B- தெரிவுசெய்வோருக்கும் தெரிவுசெய்யப்படுவோருக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் ஓர் அளவுகோலாகும்.

C- தேர்தல்களின் ஊடாக மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

D- பொறுப்பாண்மை, ஒப்படைப்பு, அங்கீகரித்தல், ஒத்திருத்தல் என்ற நான்கு வகைகளைக் கொண்டுள்ளது.

E- ஓர் அரசியல் முறைமையிலுள்ள அரசியல், பொருளாதார, சமூக குழுக்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்தும் ஒரே வழிமுறையாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

❖ ***(11) தொடக்கம் (15) வரையான கூற்றுக்களில் பிழையான அல்லது பொருத்தமற்ற கூற்றை தெரிவு செய்க.***

*(11)* அரசியல் யாப்பு என்பது

1. அரசாங்கத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் பற்றிய அடிப்படைத் தடைகளையும் வரையறைகளையும் குறிப்பிடுகின்றது.
2. அரசுக்கும் பிரசைகளுக்குமிடையிலான தொடர்புகள் பற்றிய விதிகளை விபரிக்கின்றது.
3. அரசாங்கத்தின் கட்டமைவின் அடிப்படைச் சட்டப் புறவமைப்பை விபரிக்கிறது.
4. அரசினால் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய மரபுரிமைகள் தொடர்பான முக்கிய இடங்களைப் பற்றி விளக்கிக் கூறுகிறது.
5. அரசியல் விளையாட்டை மேற்கொள்ளும் வழிமுறைகளோடும் விதிகளோடும் தொடர்பான அடிப்படைச் சட்டங்களை விபரிக்கிறது.

( )

*(12)* அரை – குறை சமஷ்டி அரசாங்கமுறை

1. இந்தியாவில் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது.
2. மத்திய மற்றும் மாநில மட்டத்தில் இரண்டு குடியுரிமைகளைக் கொண்டிருப்பதற்கு வழி செய்வதில்லை.
3. அவசரகால நிலைமையின் போது ஒற்றையாட்சி அரசாங்கமாக செயற்பட முடியும்
4. பிரான்ஸ் மற்று இலங்கையில் காணப்படுகின்றது
5. ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டிப் பண்புகளைக் கொண்டுள்ளது.

( )

(13) தேசம் என்பது

1. நிச்சயமான ஆட்புல எல்லைக்கொண்ட ஒரு நிலப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தொகுதியாகும்.
2. அரசியல் ரீதியாக சுயாதீனமாதாகும்.
3. அதன் உறுப்பினரின் வர்ணத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்படுகிறது.
4. ஒரு இனக்குழுவை அல்லது பல இனக்குழுவைக் கொண்டிருக்கலாம்.
5. அரசியல் ரீதியாக பிரான்ஸ் முதலாவது அரசாக எழுச்சியடைந்தது

( )

(14) சமூக ஜனநாயகம் என்பது

1. சமூக ஜனநாயகத்தின் முன்னோடி எட்வர்ட் பேன்ஸ்டைன் ஆவார்
2. ஜேர்மனியில் தொழிலாளர் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற கருத்தியல்
3. கூட்டுப்பேரம் பேசுதல் ஒப்பந்தம் காணப்படும்
4. செல்வம் மற்றும் வருமானங்களை சமூகத்திற்கு மீள பகிர்ந்தளித்தல்
5. பொருளாதாரத்துறையில் அரசு தலையிடுவது இல்லை

( )

(15) பெண்ணியல்வாதம் என்பது

1. அரசியல் கருத்தியல் ஆக 1970ல் ஆரம்பமானது
2. தாராண்மைப் பெண்ணியல்வாதம் தந்தைவழி தலைமைத்துவத்தை எதிர்க்கின்றது.
3. சமவுடைமை பெண்ணியல்வாதம் பெண்விடுதலை போராட்டத்தை ஆதரிக்கின்றது.
4. பின்நவீன பெண்ணியல்வாதம் பல்வேறு சமூகச் சூழல்களில் பெண்களின் துன்பியல்கள் வேறுபடுகின்றது.
5. பெண்ணியல்வாதம் ஐந்து துறைகளில் இணங்காணப்படுகிறது.

( )

❖ ***16 தொடக்கம் 25 வரையான கூற்றுகளில் பொருத்தமானவற்றை அல்லது பொருத்தமான கூற்றுகளின் சேர்மானத்தை தெரிவுசெய்க.***

(16) இலங்கையில் பிரித்தானிய குடியேற்ற நாட்டு ஆட்சியின் கீழ்

A- மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாகமுறை உருவாக்கப்பட்டது.
B- சுதந்திரமான ஊழியச்சந்தை உருவாக்கப்பட்டது
C- கிராமிய விவசாயத்துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.
D- திறந்த சந்தைப் பொளாதாரமுறை உருவாக்கப்பட்டது.
E- பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை அபிவிருத்தி செய்யப்பட்டது.

1. A,C,D 2. A,C,D,E 3. A,B,D,E 4. B,C,D,E 5. A,C,D,E

(17) 1910 முதல் 1924 வரையான யாப்பு சீர்திருத்தங்களில் உள்ளடக்கப்படுபவை

A- 1910ல் குறூ மக்கலம் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் வரையறுக்குட்பட்ட வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது.
B- 1920 மெனிங் சீர்திருத்தத்தின் மூலம் மாகாண பிரதிநிதித்துவத்திற்கு வழியேற்பட்டது.
C- நிர்வாக சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்படல்
D- சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்படல்
E- 1924 மெனிங் டெவேன்ஷயர் சீர்திருத்தத்தின் மூலம் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் பகிரப்பட்ட ஆட்சி முறையொன்று தோற்றம் பெற்றது.

1. A,B 2. B,C,D 3. C,D,E 4. A,B,C,D 5. B,C,D,E

(18) 1931ல் அறிமுகம் செய்யப்பட்ட டொனமூர் அரசியல் யாப்பானது

A- சர்வஜன வாக்குரிமையை வழங்கியது

B- சட்ட, நிர்வாக நீதிக்காரியதரிகளின் அதிகாரம் மேலோங்கிக் காணப்பட்டது.

C- நிதி, அரசசேவை, நீதியை கட்டுப்படுத்தும் அதிகாரம் இலங்கையருக்கு வழங்கப்பட்டது.

D- தேர்தல் தொகுதியடிப்படையில் 50 பேர் தெரிவு செய்யப்பட்டனர்

E- மூன்று காரிய தரிகளையும் 7 சுதேச அமைச்சர்களையும் உள்ளடக்கியது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

(19) 1931ல் அறிமுகப்படுத்தப்பட்ட டொனமூர் அரசியல் சீர்திருதத்தின் மூலம்

A- இடதுசாரி இயக்கம் பலவீனம் அடைந்தது.

B- பொதுமக்களை அரசியல் ரீதியாக பலமடையச்செய்தல்

C- தனியார் சொத்துக்களை முறையாக வரையறைக்குட்படுத்தல் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

D- இலங்கை நலன் புரியாட்சியாக வளர்ச்சியடைதல்

E- இலங்கைத் தலைவர்கள் நிர்வாகத்துறையில் ஈடுபம் வாய்ப்பு ஏற்படல்

1. ABC 2. ABDE 3. BCD 4. ABCD 5. ACDE

(20) சிறுபாண்மை ஜனக்குழுக்களின் பாதுகாப்புக்காக சோல்பரியாப்பில் இடம்பெற்ற யாப்புசார் கணிப்பீடுகளாவன

A- உரிமைகள் சட்டம்

B- செனட் சபையும் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கான 6 நியமன உறுப்பினர்களும்

C- பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள்

D- சுதந்திரமான நீதித்துறையும் அரசாங்க சேவையும்

E- உறுப்புரை 29 2ம் பிரிவு

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

(21) சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்றம்

A- எந்தவொரு சட்டத்தையும் உருவாக்கவும் இல்லாது செய்யவும் அதிகாரம் கொண்டிருந்தது.

B- பிரித்தானிய முடியை பிரதிநிதித்துவப்படுத்திய மகாதேசாதிபதி, செனற்சபை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

C- சட்டத்திற்கான இறுதி அங்கீகாரத்தினை மகாதேசாதிபதி வழங்கினார்.

D- அதனுடைய சட்டவாக்க அதிகாரத்தில் கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது.

E- ஓர் இரு மன்ற சட்ட சபையாகக் காணப்பட்டது.

1. ABCD 2. ABCE 3. ABDE 4. ACDE 5. BCDE

(22) முதலாம் குடியரசு யாப்பின் கீழ் ஜனாதிபதி

A- அரசின் நாம நிர்வாகத்தின் தலைவராககக் காணப்பட்டார்.

B- பிரதமரால் நியமிக்கப்பட்டார்

C- தேசிய அரசுப்பேரவையில் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கப்பட்ட முடியும்.

D- பதவிக்காலத்தின் போது சட்டத்தில் இருந்து விடுபடும் உரிமையைக் கொண்டிருந்தார்.

E- தேசிய அரசுப் பேரவையினைக் கூட்டுவதற்கும் கலைப்பதற்குமான அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

1. ABCD 2. ABCE 3. ABDE 4. ACDE 5. BCDE

*(23) 1972ம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் தேசிய அரசுப்பேரவை*

A- நிர்வாக, கூட்ட மற்றும் நீதித்துறை அதிகாரங்களைக் கொண்டிருந்தது

B- அரசின் மீயுயர் நிறுவனமாகக் காணப்பட்டது.

C- பொதுச்சேவையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை கொண்டிருந்தது.

D- ஓரங்கசட்ட சபையாக காணப்பட்டது.

E- அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு பதிலளிக்க கடமைப்பட்டிருந்தது.

1. ABCD 2. ABCE 3. ABDE 4. ACDE 5. BCDE

*(24) 1978ல் பிரகடனப்படுத்தப்பட்ட இரண்டாம் குடியரசுயாப்பு*

A- பெரும்பாலும் அமெரிக்க ஜனாதிபதி முறையை ஒத்த ஜனாதிபதி முறையொன்றை அறிமுகம் செய்தது.

B- பகுதியளவிலான சட்டவாக்க அதிகாரத்தைப் பெற்ற பாராளுமன்றம் என்ற சட்டத்துறையை தாபித்தது.

C- உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களைக் கொண்ட மேனிலை நீதிமன்ற முறைமையைத்தாபித்தது.

D- சிவில் சேவையின் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கு பகிரங்க சேவை ஆணைக்குழுவை மீள அமுலுக்குக் கொண்டுவந்தது

E- ஜனாதிபதியையும் மந்திரிசபையையும் உள்ளடக்கிய ஒரு கலப்பு நிறைவேற்றுத்துறை முறைமையைத்தாபித்தது

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

*(25) 1978 யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட ஜனாதிபதிப் பதவியின் ஆரம்ப இயல்புகள்*

A- அரசு நிறைவேற்றுத்துறை, அரசாங்கம் என்பவற்றின் தலைவராகவும் ஆயுதப்படைகளின் தளபதியாகவும் இருந்தமை

B- அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் உயர்கருவியாக இருந்தமை

C- ஆறுவருட காலத்துக்கு மக்களால் நேடியாகத் தெரிவுசெய்யப்பட்டமை.

D- பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் ஓர் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதிவிநீக்கம் செய்யக்கூடியதாயிருந்தமை

E- ஜனநாயக ஆட்சி என்ற போர்வையில் உருவாக்கப்பட்ட எதேச்சாதிகாரப் பதவியாக இருத்தமை.

1. ABCD 2. BCDE 3. ABCE 4. ABDE 5. ACDE

- ***(26)* தொடக்கம் *(30)* வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) மற்றும் (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச்சரியாகப் பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டவாது கூற்று |
|---|---|---|
| *(26)* | பொதுமக்களின் பிரச்சினையை தீர்ப்பதனை அடிப்படையாகக் கொண்டது அரச கொள்கை ஆகும் | அரச கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் வாழ்க்கைவட்ட செயன்முறை எனவும் அழைக்கப்படுகிறது. |
| *(27)* | இலங்கையின் நவீன ஜனநாயக வாதம் பிரித்தானிய காலனித்துவ காலத்திலேயே ஆரம்பமானது | *1978* 2ம் குடியரசுயாப்பு உருவாகத்துடன் ஜனநாயகம் முன்னோக்கிச் சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. |
| *(28)* | அமெரிக்க அரசியலமைப்பு மக்கள் இறைமை எனும் அடிப்படையில் அமையப்பெற்றுள்ளது | அமெரிக்க அரசியல் யாப்பு நெகிழாத் தன்மையுடையது ஆகும். |
| *(29)* | பிரித்தானியா ஒற்றை ஆட்சி முறையாக காணப்படுகின்றது | தற்போதுள்ள அரசியலமைப்பின் படி ஒற்றையாட்சியிலிருந்து விலகிச்சென்றுள்ளது |
| *(30)* | பிரான்ஸ் அரசியலமைப்பு சமஷ்டி அரசாங்க முறையைக் கொண்டதாகும். | பிரான்ஸ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசாங்க முறையாகும் |

(30 x 2 = 60 புள்ளிகள்)

## குறுவினா

*(31)* கீழே தரப்பட்டுள்ள இரு கூற்றுகளும் அரசியல் விஞ்ஞானக் கற்கைக்கான இரண்டு அணுகுமுறைகளின் சில பண்புகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அவ் இரண்டு அணுகுமுறைகளையும் பெயரிடுக.

(i) “அது ஆட்சிகளினதும் சமூகக் குழுக்களினதும் நடத்தைகளைப் பற்றிய அனுபவம்சார் பகுப்பாய்வில் கவனம் செலுத்துகிறது. அது சமூக உளவியல், சமூகவியல் மற்றும் கலாசார மானிடவியல் என்பவற்றோடு தொடர்பான கோட்பாடுகளையும் ஆராய்ச்சிகளையும் இணைக்க முயற்சிக்கின்றது. அது கோட்பாட்டினதும் ஆராய்ச்சியினதும் பரஸ்பரம் தங்குநிலையினை வலியுறுத்துகிறது. அது ஆழமான அனுபவம்சார் ஆராய்ச்சிச் செயன்முறையினை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்கிறது. அது பெறுமதி சாராக் கற்கையை வலியுறுத்துகிறது”

(ii) “அது இயல்பளவில் எதிர்வுகூறக் கூடியதும் உயத்தறியக் கூடியதுமாகும். அது நிச்சமான கருதுகோள்களுடன் ஆரம்பித்து அவற்றைச் சிறந்த முறையில் யதார்த்த பூர்வமாக்கும் நிறுவனங்களை நிர்ணயம் செய்கிறது. யதார்த்த உலகினில் உண்மையாக இருப்பனவற்றை விட எவை இருக்க வேண்டும் என்பதில் பிரதான கரிசனை செலுத்துகிறது.

(1) …………………………………………………………………………………………………..

(2) ………………………………………………………………………………………………….

*(32)* மனிதர் அரசியலைப் பல்வேறு வழிகளில் கற்றுக் கொள்கின்றனர். பரந்த அடிப்படையில் அவை இரு பிரதான பகுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவ்விரு பகுதிகளையும் பெயரிடுக.

(1) …………………………………………………………………………………………………….

(2) …………………………………………………………………………………………………….

(33) பின்வரும் கூற்றுகளால் விபரிக்கப்படும் சமூகத்திலுள்ள இரண்டு அரசியல் தாபனங்களின் பெயர்களை குறிப்பிடுக.

(i) இறைமை அதிகாரத்தைக் கொண்ட மத்திய நிறுவனம்

…………………………………………………………………………………………………..

(ii) அரசின் பிரதான முகவர்

…………………………………………………………………………………………………..

(34) அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு பங்களித்த இந்திய அரசியல் சிந்தனையாளர் ஒரு வரினதும் சீன அரசியல் சிந்தனையாளர் ஒருவரினதும் பெயர்களை குறிப்பிடுக.

(i) இந்தியா : ……………………………………………………………………………………

(ii) சீனா :……………………………………………………………………………………..

(35) இரண்டு பிரித்தானிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்கள் 'இயற்கை நிலை' தொடர்பாக இரண்டு வேறுபட்ட வழிமுறைகளில் விவரித்துள்ளார்கள். அவர்கள் இருவரினதும் பெயர் குறிப்பிடுக.

(i) …………………………………………….

(ii) …………………………………………….

(36) (i) "நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான தொடர்பு சேய்மையானதாகும்"

(ii) "நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான தொடர்பு மிக்க நெருக்கியதாக இருப்பதோடு அதன் காரணமாக அவ்விரு நிறுவனங்களும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன"

மேற்குறிப்பிட்ட நிறைவேற்று – சட்டத்துறைத் தொடர்புகளைக் காணக்கூடிய இரு அரசாங்க முறைகளையும் முறையே குறிப்பிடுக.

(i) ……………………………………………..

(ii) ……………………………………………..

(37) (i) "அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் பிரதான நோக்கமாகும்"

(ii) "அரசியல் அதிகாரத்தைக் கையாளுபவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதனூடாகத் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதே பிரதான கரிசனையாகும்".

மேற்குறிப்பிட்ட இரு கூற்றுக்களுக்கும் பொருந்தும் இரு வகை ஒழுங்கமைப்புகளையும் முறையே குறிப்பிடுக.

(i) ………………………………………………..

(ii) ………………………………………………..

*(38)* (i) ''மக்களினால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களின் ஆட்சியே சனநாயகமாகும்''

(ii) ''தற்கால அரசுகளின் நிறைவேற்றுத்துறை முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களை முகாமைப்படுத்தும் ஒரு குழுவேயன்றி வேறொன்றுமல்ல''

நவீன அரசுகளின் அரசாங்கம் தொடர்பான மேற்குறிப்பிட்ட இரு கூற்றுகளையும் முன்வைத்த இரு அரசியல் சிந்தனையாளர்களையும் முறையே குறிப்பிடுக.

(i) ………………………………………………….

(ii) ………………………………………………….

*(39)* சிவில் சமூகம் பற்றிய பின்வரும் கருத்துக்களை முன்வைத்தவர்களின் பெயர்களை முறையே தருக.

(i) ஒருங்கமைத்த ஜனநாயக கருத்து ………………………………………………………

(ii) புதிய மாச்சிசவாத கருத்து ………………………………………………………

*(40)* காலணித்துவ அரசினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளின் தாக்கங்கள் இருவகையினதாகும். அவற்றினை தருக.

(i) ……………………………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………………………

*(41)* காலனித்துவ ஆட்சிமுறையில் இலங்கையின் பிரதிநிதித்துவ முறை இரண்டு கட்டங்களில் ஏற்பட்டது. அவற்றினை தருக.

(i) ………………………………………………..

(ii) ………………………………………………..

*(42)* டொனமூர் அமைச்சரவையில் காணப்பட்ட இரண்டு வகையினரையும் குறிப்பிடுக.

(i) ………………………………………………..

(ii) ………………………………………………..

*(43)* இலங்கையில் பின்வரும் இரு அரசியல் நிறுவனங்களையும் உருவாக்கிய இரு அரசியலமைப்புக்களும் எவை?

(i) ஓர் ஈரங்க சட்டசபை ………………………………………………..

(ii) அரசியலமைப்பு நீதிமன்றம் ……………………………………….

(44) வெஸ்டமினிஸ்டர் மாதிரியினை அடிப்படையாக கொண்ட சுதந்திர இலங்கையின் இரு அரசியலமைப்புக்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(i) ………………………………………………

(ii) ………………………………………………

(45) 1972 முதலாம் குடியரசு யாப்பின் நாமநிறைவேற்றாளர் பதவியின் உத்தியோக பெயரையும், பதவிக்காலத்தையும் முறையே தருக.

(i) …………………………………….  (ii) …………………………………….

(46) மக்கள் இறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டாம் குடியரசு யாப்பு இருவழிமுறைகளை உருவாக்கியுள்ளது. அவற்றை பெயரிடுக.

(i) …………………………………….  (ii) …………………………………….

(47) இரண்டாம் குடியரசு யாப்பின்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் இரண்டு முறைகளையும் தருக.

(i) …………………………………….  (ii) …………………………………….

(48) சனநாயக ஆட்சிமுறை இரண்டு வகையிலான தலைப்புக்களில் விவரிக்கப்படுகின்றது. அவற்றினை தருக.

(i) …………………………………….  (ii) ……………………………………..

(49) இந்திய சமஷ்முறையில் அதிகாரப் பங்கீடு மூன்றுவகைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டினை தருக.

(i) …………………………………….  (ii) …………………………………….

(50) முரன்பாட்டு தீர்வு செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் அடிப்படை ஊடகங்கள் 4 நான்கு காணப்படுகின்றன. அவற்றில் இரண்டினை தருக.

(i) …………………………………….  (ii) …………………………………….

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
FWC
**In Collaboration with Provincial Department of Education Northern Province**
**Term Examination March - 2020.**

| | | | |
|---|---|---|---|
| தரம் - 13 (2020) | 24 T- II | அரசியல் விஞ்ஞானம் II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |

- பகுதி II மூன்று பிரிவுகளை கொண்டுள்ளது. பிரிவு 1 லிருந்து ஒரு வினாவும் பிரிவு 2 லிருந்து இரண்டு வினாக்களும் பிரிவு 3 லிருந்து ஒரு வினாவும் கட்டாய வினாக்களாகும் பிரிவு 1,2,3 லிருந்து விரும்பிய ஒரு வினாவினை தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு - 1**

1. "அரசு சமூகத்தில் காணப்படும் அரச அதிகாரத்தின் மைய நிறுவனம் ஆகும்" ஆராய்க. (20புள்ளி)

2. பின்வருவனவற்றில் இரண்டினை பரிசீலிக்குக.
   i. தேசிவாதம் (10 புள்ளி)
   ii. குடியரசுவாதம் (10 புள்ளி)
   iii. பெண்ணியவாதம் (10 புள்ளி)
   (10 x 2 = 20 புள்ளி)

3. "ஜனாதிபதி அரசாங்க முறை ஜனநாயகத் தன்மை குறைந்தது ஆயினும் செயற்றிறன் மிக்கதாகும்" இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை பரீசீலிக்குக. (20 புள்ளி)

**பிரிவு - 2**

4. காலணித்துவ நிலைமாற்றத்தினால் இலங்கையில் ஏற்பட்ட சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களை மதிப்பிடுக. (20 புள்ளி)

5. சோல்பரி அரசியல் யாப்பு மற்றும் முதலாம் குடியரசு அரசியல் யாப்புக்களின் கீழ் சட்டசபையினை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   i. அமைவுச் சேர்க்கை (10 புள்ளி)
   ii. அதிகாரங்களும் பணிகளும் (10 புள்ளி)

6. பின்வருவனவற்றில் இரண்டினை பரிசீலிக்குக.
   i. டொனமூர் யாப்பின் கீழ் நிறைவேற்றுக்குழு முறைமை
   ii. சோல்பரியாப்பு வெஸ்ட்டினிஸ்டர் மாதிரிக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளமை
   iii. முதலாம் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டதன் பின்னணி

7. இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ முறை பற்றி விமர்சிக்குக. (20 புள்ளி)

**பிரிவு - 3**

8. பொதுக்கொள்கை தொடர்பில் அரசியல் கட்சிகளிலும் சிவில் சமூகத்தினதும் பணிகளை விபரிக்குக. (20 புள்ளி)

9. பின்வருவனவற்றில் இரண்டினை பரிசீலிக்குக.
   i. பிரித்தானிய அரசியல் முறைமையின் ஒற்றையாட்சி முறையின் நிலை மாற்றங்கள்
   ii. சுவிஸ்லாந்தின் சமஷ்டி முறைமை
   iii. இந்திய அரசியல் முறையில் ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி பண்புகள்

10. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்புக்கள் எழுதுக.
   i. முரண்பாட்டின் வாழ்க்கைச்சக்கரம்
   ii. வரையறுக்கப்பட்ட அரசாங்கம்
   iii. அரசம் அரசாங்கமும்
   iv. சிவில் சமூகம்
   v. அனைத்தாண்மை அரசாங்கமுறை